நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

**பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை (NEVIDA)**

**பதவி வெற்றிடங்கள்**

2018 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுடன் இணைக்கப்பட்ட பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபைக்கு **பிராந்தியப்பணிப்பாளர்** (வெற்றிடம் -01) மற்றும் **கணக்காளர்** (வெற்றிடம்-01) பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

| பிராந்தியப்பணிப்பாளர்- வெற்றிடங்களின் எண்ணிக்கை-01 | கணக்காளர் - வெற்றிடங்களின் எண்ணிக்கை-01 |
|---|---|
| **01. சம்பள அளவுத்திட்டம்** : MM-1-3-2016<br>Rs [55,925-10 x 1,375-15 x 1910 -98,325/-] மாதாந்தம்<br>**02. வயது**<br>விண்ணப்பதாரர் 11.03.2024 ஆந் திகதியன்று 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயது வரம்பு பொருந்தாது)<br>**03. தகுதிகள்:-**<br>**வெளியக விண்ணப்பதாரிகள்**<br>01. பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் சமூக விஞ்ஞானம்/ விஞ்ஞானம்/ வியாபாரம் & பொதுநிர்வாகம்/வணிகம்/ முகாமைத்துவம் அல்லது பொறியியல் துறைகளில் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.<br>**அத்துடன்**<br>முதல் பட்டப் படிப்பை பூர்த்தி செய்த பின்னர் குறைந்த பட்சம் மூன்று (03) வருடத்திற்கு குறையாத பதவி தொடர்பான அனுபவம் பெற்றிருத்தல்.<br>**உள்ளக விண்ணப்பதாரிகள் (01 அல்லது 02)**<br>01. மேலே குறிப்பிட்டுள்ளவாறு வெளியக விண்ணப்பதாரர்களுக்கு தேவையான தகுதிகளை பெற்றிருத்தல்.<br>02. பதவி தொடர்பாக இடை நிலை முகாமையாளர் பதவியில் (MM-1-1) குறைந்த பட்சம் மூன்று (03) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை முடித்தல். | 01. **சம்பள அளவுத்திட்டம்** : MM-1-1-2016<br>Rs [53,175-10 x 1,375-15 x 1910 -95,575/-] மாதாந்தம்<br>**02. வயது**<br>விண்ணப்பதாரர் 11.03.2024 ஆந் திகதியன்று 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயது வரம்பு பொருந்தாது)<br>**03. தகுதிகள்:-**<br>**வெளியக விண்ணப்பதாரிகள் (01 அல்லது 02)**<br>01. பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/வர்த்தகம்/ நிதி/ தொழில் நிர்வாகம் (விசேடம்)- (கணக்கியல்/நிதி) / வியாபார முகாமைத்துவம் (கணக்கியல்/நிதி) துறைகளில் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.<br>**அத்துடன்**<br>முதல் பட்டப் படிப்பை பூர்த்தி செய்த பின்னர் குறைந்த பட்சம் ஒரு (01) வருடத்திற்கு குறையாத பதவி தொடர்பான அனுபவம் பெற்றிருத்தல் .<br>02. இந்த பதவிக்கு தொடர்புடைய பாடப்பகுதி சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்முறை பட்டய நிறுவனத்தின் இடைநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று அத்துடன் குறைந்த பட்சம் ஒரு வருடத்திற்கு குறையாத பதவி தொடர்பான அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>**உள்ளக விண்ணப்பதாரிகள்**<br>மேலே குறிப்பிட்டுள்ளவாறு வெளியக விண்ணப்பதாரர்களுக்கு தேவையான தகுதிகளை பெற்றிருத்தல். |

**04. வேறு தகைமைகள்**

**ஓவ்வொரு விண்ணப்பதாரரும்**

I. இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
II. பதவிக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை சிறப்பாகச் செய்வதற்கும், தீவின் எப்பாகத்திலும் கடைமையாற்றுவதற்கு போதுமான உடல் , உள தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
III. சிறந்த நன்நடத்தையுடையவராக இருக்க வேண்டும்.

**05. ஆட்சேர்ப்பு முறை**

விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அதிகாரசபையால் நியமிக்கப்பட்ட குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வில் தகுதியின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும். (ஒவ்வொரு ஆட்சேர்ப்பிற்கும் அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறை விதிகள் பொருந்தும்)

**06. நியமனத்தின் தன்மை :-**

இந்த பதவி நிரந்தரமானதுடன் மற்றும் ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிற்கு ஏற்புடையவை.

**07. விண்ணப்ப பத்திரங்களை முன்வைத்தல்**

மேற்படி பதவிக்கு அனைத்து வகையிலும் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் அமைச்சின் **www.smehci.gov.lk** என்று இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் படி தேசிய அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ், கல்வி சான்றிதழ்கள், பதவி அனுபவ சான்றிதழ்கள், அத்துடன் வேறு தகுதி மற்றும் சேவைச் சான்றிதழ்களின் பிரதியுடன் **தலைவர், புதிய பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை , இல 45, புனித மைக்கல் வீதி , கொழும்பு -03** என்ற முகவரிக்கு **11.03.2024** ஆந் திகதிக்கு முன்னர் விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் சமர்ப்பிக்க வேண்டும். (**விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்**.)

தற்போது அரச/அரச கூட்டுத்தாபனம் /நியதிச்சட்டசபையில் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் அவர்களின் நிறுவனத்தலைவர் ஊடாக மேற்கண்ட முகவரிக்கு **11.03.2024** ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன் அனுப்ப வேண்டும்.

காலதாமதமான விண்ணப்பங்கள், பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

**08. மற்றய விபரங்கள்**

மேலதிக தகவல்கள் www.smehci.gov.lk என்ற இணையத்தளத்தில் வெற்றிடத்தின் கீழ் பார்வையிடலாம்

**தலைவர்,**
**பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல 45,**
**புனித மைக்கல் வீதி ,**
**கொழும்பு -03**